<u>குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 29-12-2022 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

<u>நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வெட்டுவெந்நி, சிறியகாட்டுவிளை ஆகிய பகுதி மக்களின் வசதிக்காக ARS கண்ணக்கோடு ரேசன் கடையை பிரித்து வெட்டுவெந்நி சந்திப்பில் பி.பி.முனுசாமி வணிக வளாகத்தின் பின்புறம் ரேசன் கடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 349 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) மார்த்தாண்டம் காய்கறி சந்தை, மீன்சந்தை, லாறிபேட்டை மற்றும் காலியாக உள்ள இடங்களில் மீன் கொண்டு வரும் காலி பெட்டிகளை அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு, மலேரியா, யானைக்கால் போன்ற நோய்கள் பரவும் வண்ணம் கொசுக்கள் உற்பத்தி ஆகின்றன. பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே விண்மீன் மீன் தொழிலாளர் ஆண்கள் முன்னேற்ற சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவும், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 349 (2) தீர்மானிக்கப்பட்டது.

<u>5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கழுவன்திட்டை வாட்டர் டாங்கிற்கு எதிர்புறம் உள்ள காங்கிரீட் சாலை உடைந்து ஆள்நடமாட முடியாமல் உள்ளது. அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 350 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) பி.எஸ்.என்.எல். அலுவலகத்தின் கீழ் பந்தல் முருகன் அவர்களின் வீட்டிற்கு செல்லும் காங்கிரீட் சாலை உடைந்து காணப்படுகிறது. அதை சரி. செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 350 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) ஆர்.சி.தெருவில் உள்ள ஏசுதாஸ் காலனியில் உள்ள காங்கிரீட் சாலை உடைந்து காணப்படுகிறது. அதை சரி. செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 350 (3) தீர்மானிக்கப்பட்டது.

<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நீதிமன்ற பின்புறம் ரேசன் கடை பக்கம் ஆபத்தான நிலையில் நிற்கும் இரண்டு இலவு மரங்களை (முதிர்ச்சியடைந்த மரம்) அகற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 351 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) படப்பறை குளம் பக்கம் உள்ள பொது பைப்பில் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது அதை சரி செய்து குடிநீர் வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 351 (2) தீர்மானிக்கப்பட்டது.

9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்

1) விளவங்கோடு மாலைச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள நூலகத்தின் கூரையின் மேல் மின்கம்பி செல்கிறது. இந்த மின்கம்பியானது மூன்று தடவை நூலகத்தின் கூரையின் மேல் உரசி அறுந்து விழுந்துள்ளது. இது மிகவும் ஆபத்தானது. எனவே அந்த மின்கம்பியை மாற்று பாதையில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 352 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை- விளவங்கோடு சாலையில் விளவங்கோடு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் எதிரில் மூன்று பிரமாண்ட இலவம் மரங்கள் நிற்கின்றன. இது எந்த நேரமும் காற்றில் முறிந்து விழக்கூடிய நிலையில் நிற்கின்றது. அப்படி விழுகின்ற தருணத்தில் மிகவும் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் அருகில் கடைகள், விளவங்கோடு அரசு மேல்நிலை பள்ளி, சாலையில் எந்த நேரமும் போக்குவரத்து, பொதுமக்கள் நடமாட்டம் என நெருக்கடியான இடம். எனவே ஆபத்தான நிலையில் நிற்கும் மூன்று இலவம் மரங்களை அகற்ற வருவாய் கோட்டாட்சியாளரை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 352 (2) தீர்மானிக்கப்பட்டது.

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி வார்டு எண்.10-ல் தீயணைப்பு நிலையம் அருகில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்ட படித்துறை செல்லும் சாலையில் காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 353 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) வார்டு எண்.10-ல் நெல்லிவிளையில் இருந்து ஆற்றுக்கு செல்லும் பாதையில் இன்டர்லாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 353 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) வார்டு எண்.10-ல் அமைந்துள்ள T.B.பக்கத்திலிருந்து இடது நோக்கி செல்லும் சிறுபாதையில் இன்டர்லாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 353 (3) தீர்மானிக்கப்பட்டது.

11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.J.K. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்

1) 11-வது வார்டில் மீன்சந்தையின் அருகில் சப்பாத்தில் பலிதர்பணம் செய்வதற்கும், சபரிமலை சீசனில் சபரிமலை பக்தர்கள் குளிப்பதற்கும் எந்த

ஒரு வசதியும் இல்லாமல் உள்ளது. அதில் படித்துறை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 354 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) திரு. ஸ்டேன்லிகுமார் அவர்களின் வீட்டின் அருகிலிருந்து செறுகோட்டு விளை செல்லும் சாலையை சிமெண்டு தளம் போட்டுத்தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 354 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாத அமர்வுபடியாக ரூ.600/- வழங்கப்பட்டு வருகிறது. அண்டை மாநிலமான கேரளாவில் ரூ.9000/- (ஒன்பதாயிரம்) வழங்கப்பட்டு வருவது போல் நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கிட உள்ளாட்சி துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 354 (3) தீர்மானிக்கப்பட்டது.

<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரீகன் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) 15-வது வார்டுக்கு உட்பட்ட அட்டைக்குளம், குளத்தின் பக்கத்திலுள்ள திரு. சதீஸன் நாயர் வீட்டின் முன் சாலையில் நடுவில் அமைந்துள்ள ஓடையின் மூடி (சிலாப்) உடைந்துள்ளது. இது (அபாயகரமானது) இதே போன்று திரு. மணி வீட்டினின் உள்ள ஓடையின் மூடி உடைந்துள்ளது. போர்க்கால அடிப்படை மூலம் உடனடியாக சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 355 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) நெடும்புறத்துவிளை குமார், மணி வீட்டின் முன் தொடங்குகின்ற காங்கிரீட் சாலை பழுதடைந்து உள்ளது. அந்த சாலையை நெல்சன் பாபு வீட்டின் முன் வரை புதிய காங்கிரீட் போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 355 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) வடக்குத்தெரு, மார்த்தாண்டம் வர்த்தக சங்கத்தின் முன் உள்ள குறுகிய சாலையை தரை ஒடு பதித்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 355 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) மார்த்தாண்டம் எல்.ஐ.சி. அலுவலகத்தின் முன் உள்ள குப்பையை நிரந்தரமாக அகற்றி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 355 (4) தீர்மானிக்கப்பட்டது.

5) வடக்குத்தெரு மார்த்தாண்டத்திலிருந்து அட்டக்குளம் குளத்திப்பாறை கோவில் முன் சென்றடைகின்ற பழைய சாலையை அகற்றிவிட்டு புதிய காங்கிரீட் சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 355 (5) தீர்மானிக்கப்பட்டது.

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) APJ நகர் பாலசங்கர் வீடு முதல் தெரு முடியவுள்ள 3 மின்கம்பங்களில் C.F.L. விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 356 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) கொடுங்குளம் கோடியாவிளை பாலன் வீடு பக்கம் மின்கம்பம் நட்டு C.F.L.. விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 356 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) கீழ்பம்மம் அம்புறோஸ் வீடு மற்றும் மகிமா வீடு பக்கம் மின்கம்பத்தில் C.F.L.. விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 356 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) கீழ்பம்மம் சத்தியநேசன் வீடு பக்கம் உள்ள 2 மின்கம்பங்களில் C.F.L.. விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 356 (4) தீர்மானிக்கப்பட்டது.

5) **2022–2023–ல்** தமிழக அரசால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட வரிசீராய்வில் 2021-2022-ம் புதியதாக வரிவிதிக்கப்பட்ட வரிவிதிப்புகளை வரிசீராய்வில் உட்படுத்த கூடாது என்றும் ஏற்கனவே 2018-ல் வரி சீராய்வின் போது முந்தைய நடப்பு ஆண்டில் வரிவிதிப்பு செய்யப்பட்டவர்களுக்கு வரி சீராய்வின் போது வரி உயர்த்தப்படாமல் விலக்கு அளிக்கப்பட்டது. அது போல் தற்போதைய வரிசீராய்வில் விலக்கு அளிக்கப்பட வேண்டும். இல்லையேல் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவார்கள். எனவே தமிழக அரசு மேற்படி தீர்மானத்தை பரிசீலனை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 356 (5) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி பகுதிகளில் நெகிழி பயன்பாட்டை தவிர்க்கும் வண்ணம் விழிப்புணர்வு ஏற்படுத்திட நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளில் மஞ்சள் பை உபயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் மல்டிகலர் Coated ஸ்டிக்கர்கள் மற்றும் மஞ்சள் பை விழிப்புணர்வு மல்டிகலர் நோட்டீஸ்கள் 5000 எண்ணம் அச்சடிக்கும் வகைக்கு உத்தேச செலவு தொகை ரூ.1,30,000/- ஆகும். மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. மேற்படி ஸ்டிக்கர்கள் கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சடிப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3768/2022/**எச்**1.

மன்றத்தீர்மான எண். 357 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் ஏலம் போகாத கடைகள் ஒராண்டு குத்தகை இனங்களுக்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

I. பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G5

| | | வைப்புத் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| (i) | திரு.ஜீலியட்தாஸ், 3/60 தெற்கு ரதவீதி, இராஜகிருஷ்ணபுரம், திருநெல்வேலி. | ரூ.50,000/- | ரூ.6000/- |
| (ii) | திருமதி. சகாயமெர்சி, 11/284 வேளாங்கண்ணிசான், அழகப்பபுரம். | ரூ.50,000/- | ரூ.5000/- |

II. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.A13

| | | வைப்புத் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| (i) | திருமதி.C. ரூபி வில்சன் டவர், , மார்த்தாண்டம். | ரூ.50,000/- | ரூ.5350/- |
| (ii) | திரு.U. உமேஷ், கடிக்காரவிளை, விரிகோடு. | ரூ.50,000/- | ரூ.5200/- |

III. குழித்துறை வணிகவளாகம் கடை எண்.5

| | | வைப்புத் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| (i) | திரு.G. டொனால்டு தீபம் நிலையம், விளவங்கோடு. | ரூ.50,000/- | ரூ.3000/- |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் காணும் பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G5 இதற்கு முன் ரூ.5500/-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

வரிசை எண்.2-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண். A13 கோவிட் பெருந்தொற்று காலத்தில் கடை நடத்த இயலாமல் குத்தகைதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

வரிசை எண்.3-ல் காணும் குழித்துறை வணிகவளாக கடை எண்.5 ஒரு நபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இதற்கு முன் இக்கடையானது ரூ.7200/-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கு உரிமம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2

மன்றத்தீர்மான எண். 358 - வரிசை எண்.1 மற்றும் 2 ஏற்றுக்கொள்ளப்பட்டது. வரிசை எண்.3 மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 1 எண்ணம் BOV வாகனம் பழுது நீக்கம் செய்ய 30-06-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி தொகை

1) அக்சையா மோட்டார்ஸ் ரூ.72900/-
2) மாதவா மோட்டார்ஸ் ரூ.74635/-
3) அக்சையா மோட்டார்ஸ் ஒர்க்ஸ் ரூ.79414/-

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை கோரிய வரிசை எண்.1-ல் குறிப்பிட்ட அக்சையா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு பணியின் அவசர நிலையினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1812/2022/எச்1.

மன்றத்தீர்மான எண். 359 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட CSI. சர்ச் அருகில் புல எண்.D3-47 நிலவியல் பாதை தொடர்பாக திரு. பெர்னாட்சிங் தாஸ், த/பெ. ஏசுதாஸ் என்பவர் நகராட்சி ஆணையாளரை நான்காவது பிரதிவாதியாக்கி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் குழித்துறையில் O.S.No.121/2021-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் Counter தயார் செய்து தாக்கல் செய்த வகையில் கட்டணம் ரூ.3500/- வழங்குமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையினை வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3857/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண். 360 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட புல எண்.D3-59-ல் திரு.A. அல் அமீன் என்பவர் வரைபட அனுமதி பெறாமல் ஏற்கெனவே இருந்த பழைய கட்டிடத்தை புதுப்பித்துள்ளது தொடர்பாக குற்றவியல் நடுவர் நீதி மன்றம் குழித்துறையில் STC No.1041/2015-ன்டி குற்றவியல் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பில் வக்காலத்து தாக்கல் செய்த வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.1500/- வழங்குமாறு இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையினை வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.120/2015/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண். 361 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிசெய்த சத்தியநேசன் காலமாகி விட்டதால் அன்னாரின் மனைவி திருமதி.சி. சாரதா என்பவருக்கு சத்தியநேசன் என்பவர் செய்த வேலையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.62,424/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திரும்பி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3891/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 362 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

இந்நகராட்சி உயர்மட்ட தணிக்கை தடைக்களுக்கான Xerox மற்றும் Spiral தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்த வகையில் ரூ.4,450/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.4,450/-ஐ நகராட்சி உதவியாளர் திரு.எஸ். முருகன் என்பவருக்கு வழங்கிடவும், வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு Xerox மற்றும் Spiral எடுத்த வகைக்கு ரூ.1330/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.1330/- Dharshini Global Hub நிறுவனம் திரு. சசி என்பவருக்கு வழங்கிடவும், All Tax Demand Register தொடர்பாக Book binding தயார் செய்த வகையில் ரூ.2200/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.2200/- நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. ஞானசேகர் என்பவருக்கு வழங்கிடவும், குழித்துறை நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்காக ஆணையாளர் Seal வாங்கிய வகைக்கு ரூ.1200/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.1200/- Dharshini Global Hub நிறுவனம் திரு. சசி என்பவருக்கு வழங்கிடவும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பை கொட்டாதீர்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்தாதீர்கள் என்ற தலைப்புகளில் விளம்பர Flex Boad பதாதைகள் தயார் செய்வதற்கு ரூ.6600/-, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் Community மற்றும் Publi Toilet-ல் QR Code web portal Print எடுத்த வகைக்கு ரூ.810/- மேற்படி தொகை (ரூ.6600+810)= ரூ.7410/- S.B.M. மேற்பார்வையாளர் திருமதி. .சுபிதா என்பவருக்கு வழஙகிடவும், மேற்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குதல் தொடர்பாக வரப்பெற்ற அரசாணை மற்றும் படிவங்கள் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும் பொருட்டு ஜெராக்ஸ் எடுத்த வகையில் ரூ.681/- மற்றும் கண்ணாடி இழை காகிதத்தில் ஜெராக்ஸ் எடுத்த வகையில் ரூ.2300/- மேற்படி தொகை (ரூ.681+2300)=ரூ.2981/- நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.ஆர். கீதா என்பவருக்கும் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.-அத்தியாவசிய பணிகளுக்காக செலவுகள் மேற்கொண்டுள்ளதால் நகராட்சி பணியாளர்களுக்கு செலவின தொகை வழங்க மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1.

மன்றத்தீர்மான எண். 363 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சியில் திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் இல்லாத நகராட்சியாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு மதுரை மணி நாளிதழ் நிறுவனத்திலிருந்து ரூ.15,855/-க்கான செலவினப்பட்டியல் வரப்பெறுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3767/2022/எச்1.

மன்றத்தீர்மான எண். 364 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கணினிகள் மற்றும் பிரண்டர்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மானம் எண்.218, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று ரூ.4.1 இலட்சம் மதிப்பீட்டில் 23-11-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திரு.P.G. சுனில்குமார், அஸ்வின் கம்பியூட்டாஸ் | மதிப்பீடு விலை விகிதம் |
| 2) திரு.S. விமல் ஜெபசிங் (Alpha Tehnologies) | 0.92% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தில் வழங்கியுள்ள திரு.P.G. சுனில்குமார் (அஸ்வின் கம்பியூட்டர்ஸ்) என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை எற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திரு.P.G. சுனில்குமார் (அஸ்வின் கம்பியூட்டர்ஸ்) என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3040/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 365 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட குழித்துறை நகரம் புல எண்.C5/95-ல் உள்ள ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்தாதது தொடர்பாக திரு.T. தேவராஜ், த/பெ. தங்கப்பன் சிறிய காட்டுவிளை, வெட்டுவெந்நி என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், நகராட்சி ஆணையாளர், தாசில்தார், விளவங்கோடு வட்டம் நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட 5 பேரை பிரதிவாதியாக்கி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் WP(MD)No.25265 of 2022-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துவதற்கு திரு. ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் வசம் ஒப்படைக்கவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.:- வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வழக்கினை ஒப்படைத்தமைக்கும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.4243/2022/ந.அ,ஆ..

மன்றத்தீர்மான எண். 366 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண்.B2-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.M. செல்வராஜ் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் முடிவு செய்யலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங் கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.M. செல்வராஜ் | 2014-2015 | B2 | 129,000 | Page No.54, Sl.No.184 |

ந.க.எண்.4526/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 367 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் அமைந்துள்ள IDSMT கடை எண்.3-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.S. அகமதுகான் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப கேட்டு அவரது மனைவி திருமதி.கதீஜாபீவி மனு வழங்கியுள்ளார். திரு.S. அகமதுகான் காலமானதால் அன்னார் பெயரில் செலுத்தப்பட்டுள்ள காலங்கடந்த வைப்பு தொகையினை அன்னாரின் மனைவியின் பெயரில் வழங்க மன்றம் முடிவு செய்யலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடுபக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி.கதீஜாபீவி | 2006-2007 | 3 | 19,380 | V0l.III. Page No.19 |

ந.க.எண்.4240/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 368 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் லாரிபேட்டையில் உள்ள கட்டண கழிப்பறையினை குத்தகை எடுக்க திரு. செல்வமணி என்பவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.14850/- காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேடு Vol.V, பக்கம் எண்.239, வரிசை எண்.163-ல் உள்ளதால் .அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.4266/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 369 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நகர புல எண்.A3-64-ல் உள்ள 1260 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் விவசாய பகுதியிலும் A3-69/4-ல் உள்ள 271 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் வணிகப்பகுதியிலும் உள்ளதினை நிறுவனப்பகுதியாக நில பயன்மாற்றம் கோரிய Dr. ஷீபா ஜெயலால் குழித்துறை என்பவரது விண்ணப்பத்தின் பேரில் மேற்படி நில பயன்மாற்றம் தொடர்பாக, பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் எழுத்து பூர்வமாக 30 தினங்களுக்குள் இந்நகராட்சிக்கு தெரியப்படுத்துமாறு அறிவித்து Afternoon English daily மற்றும் தினத்தந்தி நாளிதழில் 16-06-2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது.

30 தினங்கள் கடந்த நிலையில் இந்நாள் வரை எழுத்து பூர்வமாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே ஆட்சேபனைகள் ஏதும் இல்லை எனக்கருதி மேல் நடவடிக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாகர்கோவில் அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1233/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண். 370 - நிராகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 15-12-2022 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

I. <u>வெட்டுவெந்நி மீன்சந்தை மற்றும் காய்கறி சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</u>

| | ஏலவைப்புத் தொகை ரூபாய் | வருடாந்திர குத்தகை தொகை ரூபாய் |
|---|---|---|
| (i) திரு.சி. ராஜமணி, த/பெ. செல்லப்பன், மூப்பு விளை, மருதங்கோடு. | 60,000/- | 1,35,000/- |
| (ii) திரு.சி. செல்வமணி, த/பெ. செல்லப்பன், மேலே குழிவட்டம்,கோட்டவிளை, மருதங்கோடு. | 60,000/- | 1,27,000/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி இனமான வெட்டுவெந்நி சந்திப்பில் இருந்து சப்பாத்து செல்லும் சாலையில் உள்ள கடை மற்றும் மீன்சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமமானது திரு. பாபுராஜ் என்பவரால் 2021-2022-ம் ஆண்டு வரையில் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில் உரிமம் முடிவுற்று தற்சமயம் துறை மூலமாக வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி குத்தகை இனம் சென்ற வருட குத்தகை தொகையாக ரூ.3,88,500/-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தற்சமயம் ஏலம் எடுத்திட எவரும் முன்வரவில்லை. தனியார் பேருந்துகள், கனரக வாகனங்கள், முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிக வசூல் ஆகியுள்ளது. தற்போது வாகனங்கள் வராததால் மேற்படி இனமானது குறைந்த தொகைக்கு குத்தகைக்கு கேட்கப்பட்டுள்ளது. துறை ரீதியான வசூல் மூலம் தினசரி ரூ.700/- வசூல் செய்யப்பட்டு வருகிறது. (700x365=255500) இதில் பணியாளரின் தினசரி ஊதியம் ரூ.540/- (540x365=197100) எனவே வரவு செலவினை கருத்தில் கொண்டு இவ்வினத்திற்கு உரிமம் வழங்கிட மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2

மன்றத்தீர்மான எண். 371 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள விளவங்கோடு சாலையினை சீரமைக்க ரூ.16.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியினை மேற்கொள்ள 18-11-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விபரம் கீழ்கண்டவாறு.

1) Raj Construction
2) P. ஜெயசந்திரன்
3) M. ஜாண்சன்
4) அகஸ்டின் சுரேஷ்

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் நான்கு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றுள்ளனர். எனவே அவர்களது ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 7.28% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | P. ஜெயசந்திரன் | 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| 3) | M. ஜாண்சன் | 2.83% மதிப்பீட்டை விட குறைவு |
| 4) | அகஸ்டின் சுரேஷ் | 11.07% மதிப்பீட்டை விட குறைவு |

பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**3066/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 372 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அமைந்துள்ள அட்டக்குளம் சாலைடியின் அருகே சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை மற்றும் உறைபலகையுடன் கூடிய வடிகால் அமைத்தல் பணிக்கு ரூ.3.7 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.209, நாள் 04-08-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1) | திரு.R. சுரேஷ்ராஜ் | 23.83% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.P. ஜெயசந்திரன் | 16.39% மதிப்பீட்டை விட குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**3110/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 373 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் படப்பறை மற்றும் இடைவிளாகம் பகுதியில் அமைந்துள்ள கிணற்றினை தூர்வாரி சுத்தம் செய்ய ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகர் தீர்மானம் எண்.267, நாள் 15-09-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1) | திரு.S. பாபு | 43.83% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.G. சுரேஷ் | 32.86% மதிப்பீட்டை விட குறைவு |
| 3) | திரு.C. சுரேஷ் | 14.68% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**3512/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 374 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் உள்ள கச்சேரி வார்டில் வழக்கறிஞர் திரு. மோகனன் நாயர் வீட்டின் அருகே கழிவுநீர் ஒடை அமைத்தல் பணிக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.123, நாள் 20-05-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

1) திரு.C. ராஜன் 3.76% மதிப்பீட்டை விட குறைவு
2) திரு.K.G. கிருஷ்ணதாஸ் 14.61% மதிப்பீட்டை விட குறைவு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**1419/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 375 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் உள்ள இசக்கியம்மன்கோயிலுக்கு எதிரே உள்ள அட்டக்குளத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.122, நாள் 20-05-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

1) திரு.S. பாபு 29.22% மதிப்பீட்டை விட குறைவு
2) திரு.P. ஜெயசந்திரன் 23% மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**1418/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 376 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் உள்ள பன்னியாணி OHT முதல் பன்னியாணி சந்திப்பு வரை கழிவுநீர் ஒடை அமைத்தல் பணிக்கு ரூ.8.30 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.250, நாள் 15-09-2022-ன்படி மன்ற அனுமதி பெற்று 06-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

1) திரு.K.G. கிருஷ்ணதாஸ் 21.64% மதிப்பீட்டை விட குறைவு
2) திரு.A. ஆன்றணி 26.33% மதிப்பீட்டை விட குறைவு

3) திரு.S. பாபு 39.37% மதிப்பீட்டை விட குறைவு
4) திரு.G. சுரேஷ் 2.54% மதிப்பீட்டை விட குறைவு
5) திரு.P. ஜெயசந்திரன் 24.14% மதிப்பீட்டை விட குறைவு

பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1565/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 377 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.22

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் அரசு மாதவவிலாசம் நடுநிலைப்பள்ளியில் 2022-2023 ஆண்டு உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்டுவதற்கென ரூ.18.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 23-11-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

1) திரு.D. ஜஸ்டின் குமார்
2) திரு. மத்தியாஸ் சாஜி

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றுள்ளனர். எனவே அவர்களது ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளியின் ஒப்புநோக்கு கீழ்கண்டவாறு.

1) திரு.D. ஜஸ்டின் குமார் 4.35% மதிப்பீட்டை விட குறைவு
2) திரு. மத்தியாஸ் சாஜி 2.50% மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3010/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 378 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.23

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள பாலவிளை சாலையினை சீர் அமைக்க ரூ.32.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 01-08-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

1) திரு. அகஸ்டின் சுரேஷ்
2) திரு. ஜெயசந்திரன்
3) திரு. ஜாண்சன்

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திரு. அகஸ்டின் சுரேஷ் மற்றும் திரு. ஜாண்சன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றுள்ளதின் அடிப்படையில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) திரு. ஜாண்சன் 0.75% மதிப்பீட்டை விட அதிகம்
2) திரு. அகஸ்டின் சுரேஷ் 14.33% மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்.**3997/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 379 - மறு ஒப்பந்தப்புள்ளி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.